**IN THE COURT OF SUB COURT, USILAMPATTI**

**O.S. No.122 / 2022**

**Dated: 10.07.2026**

Name : **விஜயகுமார்** (PW1)

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

எனது சொந்த ஊர் சில்லாம்பட்டி, உசிலம்பட்டி தாலுகா. எனக்கு வயது 50. நான் டெய்லர் கடை வைத்துள்ளேன். சுமார் 20 ஆண்டுகளாக கடை வைத்துள்ளேன். 20 ஆண்டுகளுக்கு முன்பு டெய்லர் கடையில் 15 ஆண்டுகளாக மதுரையில் வேலை பார்த்து வந்தேன். நான் வருமானவரி செலுத்துவது இல்லை. தையல் தொழில் போக வேறு வியாபாரம் எதுவும் செய்யவில்லை. தையல் தொழிலில் மாதம் ரூ.50,000/- வரும். அதற்கு முன்பு 20 ஆண்டுகளாக மாதம் ரூ.40,000/- வரும். என் வருமானத்தை காட்ட கணக்கு வழக்கு எதுவும் இல்லை. தையல் கடை வைப்பதற்கு முன்பு காட்டுராஜா என்பவருடன் சேர்ந்து பஸ் ஸ்டாண்டில் துணி கடை வைத்திருந்தேன் என்றால் என் மகன் பெயரில் தனியாக வைத்திருந்தேன் அதன் பிறகு காலி செய்துவிட்டேன். பஸ் ஸ்டாண்டிற்குள் குரு ஒயின்ஷாப் வைத்திருந்த கணேசன் என்பவரது பெயருக்கு கடை ஒதுக்கப்பட்டு அவரிடம் நான் வாடகை தாரராக இருந்தேன். கடை வைப்பதற்கு உரிமம் மற்றும் வங்கிக் கணக்கு வாங்கி இருந்தேனா என்றால் இல்லை. தற்போது நான் நடத்திவருவதாக சொல்லக்கூடிய தையல் கடைக்கு வரவு செலவினங்களுக்கு கணக்கு பேரேடு பராமரித்து வருகிறேனா என்றால் இல்லை. தையல் கடைக்கு அனுமதி பெற்றுள்ளேனா என்றால் அதற்கும் அனுமதி கிடையாது. எனக்கு 2001ல் திருமணம் ஆனது. என் மனைவி வேலை பார்க்கவில்லை. என் மனைவி

வழியில் வேறு வருமானம் எதுவும் இல்லை. 20 ஆண்டுகள் தொழில் செய்து சொத்து எதுவும் வாங்கவில்லை. எனக்கு 3 குழந்தைகள். மூவரும் படிக்கிறார்கள் வேலைக்கு போகவில்லை. பிரதிவாதியை நேரடியாக தெரியாது என்றால் சரியில்லை. பிரதிவாதியை சுமார் 10, 15 ஆண்டுகளாக தெரியும். என் கடைக்கு பிரதிவாதி துணி தைக்க வருவார் அப்போது பழக்கம். 20 ஆண்டுகளாக நான் பராமரித்து வரும் தையல் அளவீடு எடுத்தற்கான புத்தகத்தை பார்த்தால் 20 ஆண்டுகளில் எத்தனை முறை தைப்பதற்கு வந்துள்ளார் என்ற விவரம் தெரியும் என்றால் நான் ஒவ்வொரு வருடமும் ஆயுதபூஜைக்கு புத்தகங்களை அழித்துவிடுவோம் என்று சாட்சி கூறுகிறார். நான் வங்கி பரிவர்த்தனை சுமார் 10 ஆண்டுகளாக உசிலம்பட்டி TMB, கனரா வங்கியில் பரிவர்த்தனை செய்து வருகிறேன். கனரா வங்கியில் சேமிப்பு கணக்கு மற்றும் நடப்பு கணக்கு உள்ளது. TMB வங்கியில் சேமிப்பு கணக்கு உள்ளது. 10 ஆண்டுகளாக வங்கி பரிமாற்றத்தில் சுமராக ஒரு மாதத்திற்கு எவ்வளவு தொகை பரிமாற்றம் இருக்கும் என்று பார்த்துதான் சொல்ல முடியும். 10 ஆண்டுகளுக்கு வங்கி Statement பார்த்துதான் சொல்லமுடியும் கணக்கு புத்தகம் இல்லை. சேமிப்பு கணக்கில் சுமாராக ஒரு ஆண்டிற்கு ரூ.5 லட்சம் முதல் 10 லட்சம் பரிவர்த்தனை இருக்குமா என்றால் பார்த்துதான் சொல்லமுடியும். சேமிப்பு கணக்கில் அதிகபட்சம் சேமிப்பாக சுமார் 50,000/- முதல் ஒரு லட்சம் இருக்கும். என் தொழில் மூலமாக அதற்கு மேல் வருமானம் வர வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். விசேசம் வைப்பேன் என்று சாட்சி கூறுகிறார். 20 ஆண்டுகளில் சுமார் 3 முறை விசேசம் வைத்துள்ளேன். அதற்கான மொய் நோட்டு உள்ளது. 3 முறை விசேசம் வைத்ததில் கடைசி விசேசத்தில் ரூ.19 லட்சம் மற்றும் சில்லரை மொய் வந்தது. மற்ற 2

விசேசங்களில் மொய் நோட்டை பார்த்துதான் சொல்லமுடியும். விசேசத்திற்கு வரும் பணத்தை சேமிப்பு கணக்கில் போட்டு வைத்து தேவைப்பட்டால் எடுத்துவிடுவேன். விசேசம் மூலம் வந்த வருமானம் சேமிப்பு கணக்கில் எவ்வளவு போட்டேன் என்று கணக்கை பார்த்து தான் சொல்ல முடியும். அடுத்தமுறை வரும்போது மொய் நோட்டு கொண்டுவரமுடியும் 10 ஆண்டுகளுக்கான வங்கி கணக்கு வங்யில் கொடுத்தால் கொண்டு வருவேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது ).

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the witness and admitted and signed by the witness to be correct.

L MAHESWARI

Digitally signed by L MAHESWARI
Date: 2026.07.10 11:42:43 +0530

Sub Judge,
Usilampatti.